**உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு**
(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை)

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2015–2016

**மானியக் கோரிக்கை எண். 13**


**இரா. காமராஜ்**
**உணவு, இந்து சமயம் மற்றும்**
**அறநிலையத் துறை அமைச்சர்**



தமிழ்நாடு அரசு
2015


## பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முகவுரை | 1 – 2 |
| 1 | பொது விநியோகத் திட்டம் | 3 – 18 |
| 2. | விலைவாசிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 19 – 21 |
| 3. | நுகர்வோர் பாதுகாப்பு | 22 – 31 |
| 4. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 32 – 47 |
| 5. | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 48 – 56 |
| 6. | அமலாக்கம் | 57 – 62 |
| | முடிவுரை | 63 |

## முகவுரை

அனைவருக்கும் உணவு பாதுகாப்பு வழங்குவதில் அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த இலக்கை அடைய அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதால், உணவு பாதுகாப்பை வழங்கும் சிறந்த திட்டமாக அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது.

2. மத்திய அரசு நாடு முழுவதும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தினை நடைமுறைபடுத்தியுள்ளது. மத்திய அரசு இயற்றியுள்ள தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013ன்படி, மாநிலத்தின் மக்கள் தொகையில் 50.55 சதவிகிதத்தினர் மட்டும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பயன்பெற இயலும். எனவே, மாநில அரசானது, இச்சட்டத்தினை அமல்படுத்த தனது கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.

3. பொருட்களின் விலை உயர்வில், குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. எனவே, சந்தை தலையீடு நடவடிக்கைகளுக்காக ரூ.100 கோடி நிதியுடன் கூடிய விலை கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சில அத்தியாவசியப் பொருட்களின் விலையில் இயல்புக்கு அதிகமாக ஏற்ற இறக்கம் இருக்கும்போது இந்நிதியத்திலிருந்து நிதியினை பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்த சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகின்றன. சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கான மானியம் முழுவதும், மாநில அரசால் ஏற்கப்படுகிறது.

# இயல்–1

## பொது விநியோகத் திட்டம்

### 1.1 முன்னுரை

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் வருமான அடிப்படையில் இல்லாமல், ஏழை எளிய மக்கள் விடுபடாமல் அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களுக்கும், குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு உணவு பாதுகாப்பு அளிப்பதே பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். மைய அரசு பரிந்துரைத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தாமல் கடந்த 40 ஆண்டு காலமாக பாகுபாடற்ற அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறது.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையானது, பொது விநியோகத் திட்டத்தினை முறைப்படுத்தும் அரசின் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதுடன், அத்தியாவசிய பண்டங்கள் சட்டம், 1955 மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்துகிறது.

### 1.2 நியாயவிலைக் கடைகள்

பெரும்பாலான நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், குறைந்த



எண்ணிக்கையிலான கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. இதை தவிர, மகளிர் சுய உதவிக்குழுக்கள் போன்ற இதர அமைப்புகளாலும் நியாயவிலைக் கடைகள் நடத்தப்படுகின்றன. இம்மாநிலத்தில் தனியர்/தனியார் நிறுவனத்தால் நியாயவிலைக் கடைகள் ஏதும் நடத்தப்படுவதில்லை.

31.03.2015 அன்றைய தேதியில், மாநிலத்தில் 34,214 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 25,446 நியாயவிலைக் கடைகள் முழு நேரக் கடைகளாகவும், 8,768 நியாயவிலைக் கடைகள் பகுதி நேரக் கடைகளாகவும் செயல்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

| நிறுவனம் | முழு நேர அங்காடி | பகுதி நேர அங்காடி | மொத்தம் |
|---|---|---|---|
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,291 | 137 | 1,428 |
| கூட்டுறவு ச் சங்கங்கள் | 23,639 | 8,582 | 32,221 |
| மகளிர் நடத்தும் நியாயவிலை அங்காடிகள் (சுய உதவிக் குழுக்கள் நடத்துபவை உட்பட) | 485 | 47 | 532 |
| கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நடமாடும் நியாயவிலை அங்காடிகள் | 31 | 2 | 33 |
| **மொத்தம்** | **25,446** | **8,768** | **34,214** |

## 1.3 குடும்ப அட்டைகள்

### 1.3.1 *குடும்ப அட்டைதாரர்கள் விருப்பம்*

தமிழ்நாட்டில் குடும்ப அட்டை கோருபவர்களுக்கு அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. 31.03.2015 வரையில் மாநிலத்தில் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் வகை மற்றும் எண்ணிக்கை விபரம் வருமாறு:

| குடும்ப அட்டையின் வகை | உரித்தான அத்தியாவசிய பொருள்கள் விபரம் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பச்சைநிற அட்டைகள் (அரிசி விருப்ப அட்டைகள் ) | அனைத்துப் பொருள்களும் | 1,87,96,375 |
| வெள்ளை நிற அட்டைகள் (சர்க்கரை விருப்ப அட்டைகள் ) | அரிசி தவிர அனைத்துப் பொருள்களும் | 10,72,326 |
| காக்கி நிற அட்டைகள் (காவலர் அட்டைகள் ) | அனைத்துப் பொருள்களும் | 64,751 |
| வெள்ளை நிற அட்டைகள் (எப்பொருளும் வேண்டாத அட்டைகள் ) | எந்தப் பொருளும் இல்லை | 63,962 |
| | மொத்தம் | 1,99,97,414 |



குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்க தங்கள் குடியிருப்பிலிருந்து 1.5 கிலோ மீட்டருக்கு மேல் செல்லாத வகையில், குடும்ப அட்டைதாரர்களின் குடியிருப்புக்கு அருகிலேயே நியாயவிலைக் கடைகளை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மலைப் பகுதிகள், மக்கள் எளிதில் சென்று வர முடியாத பகுதிகள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக்கூடிய பகுதிகளில் குறைவான குடும்ப அட்டைகள் இருந்தாலும், நியாய விலை கடைகள் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை தளர்த்தி, புதிய நியாய விலை கடைகள் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

### 1.3.2 *அந்தியோதயா அன்னயோசனா திட்ட குடும்ப அட்டைகள்*

உச்ச நீதிமன்றத்தின் ஆணையினை செயல்படுத்தும் பொருட்டு, வறியவர்களில் மிகவும் வறியவர்களை கண்டறிந்து அவர்களது குடும்ப அட்டைகளுக்கு அந்தியோதயா அன்னயோசனா திட்ட முத்திரையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அட்டைகளின் எண்ணிக்கை மைய அரசின் அறிவுரைகளின்படி அவ்வப்போது அதிகரிக்கப்பட்டு மிக வறிய நிலையிலுள்ள தகுதி படைத்த பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அந்தியோதயா அன்னயோசனா திட்ட அட்டைகளின் எண்ணிக்கை 19,01,971 ஆகும்.

தெரிவு செய்யப்பட்ட அந்தியோதயா அன்னயோசனா திட்ட பயனாளிகளில் தகுதியில்லாத பயனாளிகளை கண்டறிய அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களால் உரிய தணிக்கைகள் செய்யப்பட்டு, தகுதியற்ற பயனாளிகள் நீக்கம் செய்யப்பட்டு அப்பயனாளிகளின் இடங்கள், தகுதியான பயனாளிகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்படுகின்றன.

## 1.3.3 *திருநங்கையர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்குதல்*

தமிழ்நாட்டில் திருநங்கையர்களுக்கு 31.03.2015 வரை 1,803 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரே வீட்டில் குழுவாக வசிக்கும் திருநங்கையர்களை குடும்பமாக கருதி அவர்களுக்கும் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது.

## 1. 4 அத்தியாவசியப் பொருட்களின் விநியோக அளவு

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. நிறைந்த ஊட்டச்சத்து வழங்கும் பொருட்டு, சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறப்புப் பொது



விநியோகத் திட்டத்திற்கான மானியம் முழுவதும் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

பொருட்களின் விலை மற்றும் வழங்கல் அளவு விவரம் பின்வருமாறு :

| பொருள்கள் | விற்பனை விலை | விநியோக அளவு |
|---|---|---|
| அரிசி | விலையில்லா அரிசி (01.06.2011 முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி) | ➢ மாதம் ஒன்றுக்கு பெரியவர்களுக்கு 4 கிலோ, சிறியவர்களுக்கு 2 கிலோ ஆக, குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 12 கிலோ, அதிக பட்சம் 20 கிலோ, நீலகிரி மாவட்டத்தில் மட்டும் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 16 கிலோ அதிகபட்சம் 24 கிலோ.<br>➢ அந்தியோதயா அன்னயோஜனா குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 35 கிலோ. |
| சர்க்கரை | ரூ. 13.50 (கிலோ ஒன்றுக்கு) | நபர் ஒருவருக்கு 500 கிராம் வீதம் மாதம் ஒன்றுக்கு அதிக பட்ச அளவு 2 கிலோ. சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 3 கிலோ. |

| பொருள்கள் | விற்பனை விலை | விநியோக அளவு |
|---|---|---|
| கோதுமை | ரூ 7.50 (கிலோ ஒன்றுக்கு) | சென்னை நகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 10 கிலோ. இதர பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 5 கிலோ. |
| மண்ணெண்ணெய் | ரூ. 13.60 முதல் ரூ.14.20 வரை (லிட்டர் ஒன்றுக்கு) | குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் எரிவாயு இணைப்பு பெற்றிருப்பதை பொறுத்து குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 3 லிட்டரிலிருந்து 15 லிட்டர் வரை. |
| துவரம்பருப்பு * | ரூ. 30 (கிலோ ஒன்றுக்கு) | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 1 கிலோ. |
| உளுத்தம்பருப்பு | ரூ. 30 (கிலோ ஒன்றுக்கு) | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 1 கிலோ. |
| பாமாயில் | ரூ.25 (லிட்டர் ஒன்றுக்கு) | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் 1 லிட்டர். |

* தற்சமயம் துவரம் பருப்புக்கு மாற்றாக கனடா மஞ்சள் பருப்பு வழங்கப்படுகிறது.



## 1.5 அரிசி விநியோகம்

தமிழ்நாட்டு மக்களின் முக்கிய உணவாக அரிசி திகழ்கிறது. மத்திய தொகுப்பிலிருந்து மைய அரசு வழங்கும் பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசியை இந்திய உணவுக் கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்கிறது. தற்போதைய மாதாந்திர அரிசி ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:

| வ. எண். | வகை | மாதஒதுக்கீடு (மெ. டன்னில்) |
|---|---|---|
| 1 | அந்தியோதயா அன்னயோசனா | 65,262 |
| 2 | வறுமைக்கோட்டிற்கு கீழ் | 1,04,936 |
| 3 | வறுமைக்கோட்டிற்கு மேல் | 1,26,255 |
| | **மொத்தம்** | **2,96,453** |

மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் மற்றும் அந்தியோதயா அன்னயோசனா உட்பட இதர நலத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய அரிசியின் அளவு 3.90 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். தற்போது அந்தியோதயா அன்னயோசனா உட்பட பொது விநியோகத் திட்டத்தின் கீழான சராசரி மாதாந்திர அரிசி நுகர்வு 3.25 இலட்சம் மெட்ரிக் டன்னாகும்.

தமிழ்நாட்டில், வறுமைக் கோட்டிற்கு கீழ், வறுமைக் கோட்டிற்கு மேல் மற்றும் அந்தியோதயா அன்னயோசனா ஆகியவற்றின் மாதாந்திர ஒதுக்கீடு முழுவதையும் பயன்படுத்துகிறது. பரவலாக்கப்பட்ட

நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மைய அரசின் சார்பாக கொள்முதல் செய்த நெல் முழுவதையும் அரவை செய்து மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசி ஒதுக்கீட்டில் ஈடுசெய்யப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பயன் படுத்தப்படுகிறது. வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயர்ந்ததைத் தொடர்ந்து பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி நுகர்வு அதிகரித்து வருகிறது. மைய அரசின் அரிசி ஒதுக்கீட்டிற்கும், மாதாந்திர பொது விநியோகத் திட்ட நுகர்விற்கும் இடையேயான சுமார் 28,000 மெட்ரிக் டன் பற்றாக்குறையை, மைய அரசின் இடைக்கால (Adhoc) ஒதுக்கீட்டின் மூலம் ஈடு செய்யப்படுகிறது.

**ரமலான் மாதத்தில் சிறுபான்மையினருக்கு அரிசி வழங்குதல்**

ரமலான் மாதத்தில் ‘நோன்பு கஞ்சி’ தயாரிப்பதற்கு, மசூதிகளுக்கு அரிசி வழங்குவதற்காக அரசு சிறப்பு ஒதுக்கீடு செய்கின்றது.

## 1.6 கோதுமை விநியோகம்

**2014–15**ம் ஆண்டிற்கு, மைய அரசு, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அந்தியோதயா அன்னயோசனா/வறுமை கோட்டிற்கு கீழ் மற்றும் வறுமை கோட்டிற்கு மேல் உள்ள தமிழ்நாட்டில் வசிக்கும் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு **13,783** மெட்ரிக் டன் கோதுமை ஒதுக்கீடு செய்துள்ளது. மக்களின் அதிகரித்து வரும்



கோதுமை தேவையின் காரணமாக, தற்போதைய ஒதுக்கீட்டினை **20,000** மெட்ரிக் டன் அளவிற்கு உயர்த்தி வழங்குமாறு மைய அரசை தமிழ்நாடு அரசு கோரியுள்ளது.

## 1.7 சர்க்கரை விநியோகம்

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு சர்க்கரையின் மாதாந்திரத் தேவை **37,163** மெட்ரிக் டன் ஆகும். முன்னர், மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் **10,820** மெட்ரிக் டன் லெவி சர்க்கரையை ஒதுக்கீடு செய்து வந்தது. ஆனால், **01.06.2013** முதல் சர்க்கரை ஆலைகளுக்கான லெவி கட்டுப்பாடுகளை மத்திய அரசு நீக்கியுள்ளது. மத்திய அரசு பொது விநியோகத் திட்டத்திற்கு **10,820** மெட்ரிக் டன் சர்க்கரைக்கு மட்டும் கிலோ ஒன்றுக்கு ரூ.**18.50** வீதம் மானியம் வழங்கி வருகிறது. இருப்பினும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சர்க்கரைக்கான கூடுதல் செலவினம் முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்கிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சர்க்கரையை வெளிச்சந்தை விலையில் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் மூலமாக கொள்முதல் செய்கிறது. வெளிச்சந்தையில் கூடுதல் விலையில் கொள்முதல் செய்யப்பட்டு வந்தாலும், சில்லறை விற்பனை விலையில் மாற்றம் ஏதும் செய்யாமல் தமிழ்நாடு அரசு குடும்ப அட்டைதாரர்களுக்கு சர்க்கரையை விநியோகம் செய்வதில் உறுதியாக உள்ளது.

## 1.8 மண்ணெண்ணெய்

### 1.8.1 *மண்ணெண்ணெய் தேவை மற்றும் ஒதுக்கீடு*

மத்திய அரசின் கொள்கையின்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விளக்கெரித்தலுக்கும், சமையல் பயன்பாட்டிற்கும் மட்டுமே மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாநிலத்தின் மண்ணெண்ணெய் தேவை 65,140 கிலோ லிட்டர் ஆகும். மத்திய அரசு இம்மாநிலத்திற்கு, மே 2011–ல் 52,806 கிலோ லிட்டராக இருந்த மண்ணெண்ணெயின் மாத ஒதுக்கீட்டினை படிப்படியாக குறைத்து ஏப்ரல் 2015–ல் 28,476 கிலோ லிட்டராக குறைத்துள்ளது. இவ்வொதுக்கீடானது மாநிலத்தின் தேவையான 65,140 கிலோ லிட்டரில் 44% மட்டுமே ஆகும். குடும்ப அட்டைதாரர்களின் தேவையினை பூர்த்தி செய்ய ஏதுவாக, 65,140 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் அல்லது குறைந்தபட்சம் மே 2011–ல் வழங்கப்பட்ட 52,806 கிலோ லிட்டர் என்ற அளவில் ஒதுக்கீட்டினை உயர்த்தி வழங்க மத்திய அரசினை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.



### 1.8.2 *மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை விலை*

01.08.2011 முதல் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைகளுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.13.60 முதல் ரூ.14.20 வரையிலான சில்லறை விற்பனை விலையில் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

### 1.8.3 *மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைத்தல்*

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் வழங்குதலை ஒழுங்குபடுத்த, வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் 5000 முதல் 15,000 குடும்ப அட்டைதாரர்கள் மண்ணெண்ணெய் பெற ஏதுவாக உள்ளது. வழங்கு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுவதால் மாதம் முழுவதற்கும் தேவையான இருப்பு மற்றும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சரியான அளவில் மண்ணெண்ணெய் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது. தற்போது கூட்டுறவுத் துறையின் கீழ் 261 வழங்கு நிலையங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 37 வழங்கு நிலையங்களும், ஆக மொத்தம் 298 வழங்கு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

அனைத்து வழங்கு நிலையங்களுக்கும் கையடக்க மின்னனு ரசீதிடும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

## 1.9 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்

குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் **13,450** மெ.டன் துவரம் பருப்பு, **7,000** மெ.டன் உளுத்தம் பருப்பு, **15,000** கிலோ லிட்டர் செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவை மானிய விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது துவரம் பருப்புக்கு மாற்றாக கனடா மஞ்சள் பருப்பு வழங்கப்படுகிறது.

## 1.10 குறைதீர் பிரிவு

பொது விநியோக திட்டம் தொடர்பாக பெறப்படும் புகார்களை கண்காணித்து, மறு ஆய்வு செய்து உடனுக்குடன் தீர்வு செய்யும் பொருட்டு முழு அர்பணிப்புடன் பணியாற்றக் கூடிய புகார் பிரிவு ஒன்றை கொண்ட மாநில நுகர்வோர் உதவி மையத்தினை தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது. இந்த புகார் பிரிவில் பெறப்படும் குறுஞ் செய்திகள் உடனடியாக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தெரிவிக்கப்பட்டு உடனுக்குடன் தீர்வு காணப்படுகிறது. பொது மக்கள் இந்த புகார் பிரிவினை தொடர்பு கொண்டு விவரங்கள் பெறவும் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளவும் வழிவகை



செய்யப்பட்டுள்ளது. குறைதீர் பிரிவு கீழ்க்கண்ட அலைபேசி எண்களுடன் செயல்பட்டு வருகின்றது.

| வ எண் | குறுஞ் செய்தி அனுப்ப வேண்டிய அலைபேசி எண்கள் |
|---|---|
| 1 | 72 9999 8002 |
| 2 | 86 8001 8002 |
| 3. | 86 8002 8003 |

## 1.11 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள்

நுகர்வோர் மற்றும் இதர பொருள் குறித்த விழிப்புணர்வினை மாணவர்களிடம் உருவாக்கும் நோக்கில், அனைத்து கல்வி நிலையங்களிலும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது மாநிலத்தில் **1500** பள்ளிகளிலும் **500** கல்லூரிகளிலும் மொத்தம் **2,000** குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் ரூ.**2.75** கோடி நிதி உதவியில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## 1.12 மின்னணு குடும்ப அட்டை (Smart Card)

உடற்கூறு முறையிலான விவரங்களின் அடிப்படையில், தற்போது நடப்பில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரால் தேசிய மக்கள் தொகை பதிவேட்டிற்காக உடற்கூறு முறையில்

மக்களின் 10 விரல் ரேகைகள் மற்றும் கண்ணின் கருவிழி பட விவரங்கள் பதிவு செய்து பிரத்யேக அடையாள எண் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. உடற்கூறு அடிப்படையிலான கணக்கெடுப்பு பணி முடிவடைந்தவுடன், அத்தகவல் தொகுப்பின் அடிப்படையில், மின்னணு குடும்ப அட்டை வழங்கப்படவுள்ளது. இதன்மூலம், ஒரு நபர், ஒன்றிற்கு மேற்பட்ட குடும்ப அட்டைகளில் இடம்பெறுவது தவிர்க்கப்பட்டு, போலி குடும்ப அட்டைகள் நீக்கப்படும்.

## 1.13 பொது விநியோகத் திட்டத்தினை கணினிமயமாக்கல்

பொது விநியோகத் திட்டத்தின் அனைத்து நிலைகளும் கணினிமயமாக்கப்பட்டு, போலி குடும்ப அட்டைகள், போலி பட்டியல் தயாரித்தல் போன்ற நடவடிக்கைத் தவிர்க்கப்பட்டு, மின்னணு குடும்ப அட்டை விநியோகிப்பதன் மூலம் புதிய அட்டை வழங்குதல், முகவரி மாற்றம் செய்தல் போன்ற சேவைகளை எளிய முறையில், பொதுமக்கள் வசதிக்கேற்ப எளிதில் பெறக்கூடிய வகையில் செய்ய இயலும். அதே நேரத்தில் அத்தியாவசியப் பொருள்களின் நகர்வு மற்றும் விற்பனையை நிகழ்நேரத்தில் கண்காணிப்பதற்கும் இது உதவும். ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மூலமாக இத்திட்டத்தினை செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, இப்பணி ஓரிரு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு படிப்படியாக மாநிலம் முழுவதற்கும் விரிவாக்கப்படும்.



## 1.14 போலி குடும்ப அட்டைகள் களைதல்

கடந்த நான்காண்டுகளில், 3,70,538 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், போலி குடும்ப அட்டைகள் களையும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## 1.15 உணவு மானியம்

2015–16ஆம் நிதியாண்டில், அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்திற்காக பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டங்களுக்கு, உணவு மானியத் தொகையாக ரூ.5,300 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# இயல்–2

## விலைவாசிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

**2.1** அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, மக்களின், குறிப்பாக ஏழை எளிய மற்றும் நலிந்த மக்களின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்திலிருந்து, ஏழை, எளிய மற்றும் நலிந்த மக்களை பாதுகாக்க, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**2.2** அத்தியாவசிய பொருட்களின் விலையினை கட்டுக்குள் வைத்திருக்க, அரசு விலை கட்டுப்பாட்டு நிதியத்தினை ரூ.50 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக உயர்த்தியுள்ளது. இதைத்தவிர, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும், அரசு, உணவு அமைச்சர் அவர்களின் தலைமையில் **விலை கண்காணிப்பு குழுவை** (Price Monitoring Committee) அமைத்து அதன் மூலம் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இக்குழு, பொருட்களின், முக்கியமாக அரிசி, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் வகைகளின் விலைகளை கண்காணித்து, தேவையான சமயங்களில் கூடி விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.



**2.3** மாநில அரசு, வெளிச்சந்தையில் அரிசியின் விலையினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியினை வாங்கி பொது மக்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.20/–க்கு **வெளிச்சந்தை விற்பனைத் திட்டம்** (OMSS) மூலம் விற்பனை செய்து வருகிறது.

**2.4** இதைத் தவிர, காய்கறிகளின் விலையேற்றத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அரசு, 58 பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகளை நுகர்வோர் கூட்டுறவு விற்பனை நிலையங்கள்/அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலம் சென்னை உட்பட மாநிலத்தின் இதர பகுதிகளில் நடத்தி வருகிறது. அனைத்து விற்பனை நிலையங்களுக்கும், விலை கட்டுப்பாட்டு நிதியிலிருந்து சுழல் நிதியாக ஒரு கடைக்கு ரூ.10 இலட்சம் வீதம் வழங்கப்பட்டுள்ளது. புளியின் இயல்பு மீறிய விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த, மானிய விலையில் ஒரு கிலோ புளியினை ரூ.60/-க்கு கூட்டுறவு/தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய விலைக் கட்டுப்பாட்டு நிதியிலிருந்து ரூ.3.30 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**2.5** தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு கூட்டமைப்பு மூலம் 1,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு, 1,000 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பு, 25 மெட்ரிக் டன் குண்டு மிளகாய், 10 மெட்ரிக் டன் நீட்டு மிளகாய், 50 மெட்ரிக் டன் புளி மற்றும் 24000 லிட்டர் நல்லெண்ணெய் கொள்முதல் செய்ய விலை கட்டுப்பாட்டு நிதியிலிருந்து வட்டியில்லா மூலதன உதவியாக ரூ.6 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

**2.6** மேலும், அத்தியாவசிய பண்டங்களின் சட்டம், **1955–**ன்கீழ் வெங்காயம், மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் இருப்பு வைப்பினை (Stock Holding Limits) அறிவிக்கை (Notified) செய்துள்ளதன் காரணமாக, தமிழ்நாட்டில் பதுக்கல் நடவடிக்கைகள் தடுக்கப்பட்டு வருகின்றன.



# இயல் – 3

# நுகர்வோர் பாதுகாப்பு

## 3.1 முன்னுரை

நுகர்வோர் பாதுகாப்பிற்கு இத்துறை தலையாய முக்கியத்துவம் அளிக்கிறது. அதிகம் படித்தவர்கள், படிக்காதவர்கள், வசதி படைத்தவர்கள் மற்றும் வசதி குறைந்தவர்கள் என அனைத்து தரப்பினரையும் நுகர்வோர்களாக கொண்டுள்ள தமிழ்நாட்டில் நுகர்வோர் விழிப்புணர்வு அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையக்கூடிய முக்கியமான பணியாகும். தகுந்த குறைதீர் அமைப்புடன்கூடிய தகவல், கல்வி, தகவல் தொழில்நுட்பங்கள் மூலமே இலக்கை அடையமுடியும். தமிழ்நாடு அரசு நுகர்வோர்களுக்கு சட்ட விதிகளின்படி, உரிய விலையில் நல்ல தரத்துடன் பொருட்கள்/சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதை முக்கிய நுகர்வோர் கொள்கையாக கொண்டுள்ளது. நுகர்வோர்கள் தங்களது பணத்திற்கு உரிய விலை மதிப்பை பெற்றிடச் செய்வதில் உறுதி கொண்டுள்ளது. நுகர்வோருக்கான உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், குறைகளை விரைந்து தீர்ப்பதற்கு உறுதி செய்ய போதுமான அதிகாரம் பெற்ற திறம்பட செயல்படக்கூடிய தீர்வு அமைப்பு நிறுவுதல், ஆகிய இரண்டு தொடர் நடவடிக்கைகள் வாயிலாக இந்நோக்கம் எய்தப்படும்.

## 3.2 நுகர்வோர் குறை தீர்வுகள்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன் கீழ், தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய 3 அடுக்கு குறைதீர் அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:

- தேசிய அளவில் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புதுதில்லி
- மாநில அளவில் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும்
- மாவட்ட அளவில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்.

### 3.2.1 *தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்*

தேசிய ஆணையம் அனைத்து மாநிலங்களிலுமுள்ள நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்கு மேல் முறையீட்டு ஆணையமாக புது தில்லியில் செயல்படுகிறது. இவ்வாணையத்தில், ரூ.1 கோடி மற்றும் அதற்கு மேல் நிவாரணம் கோரும் வழக்குகளை நேரடியாக தொடரலாம். இவ்வாணையத்திற்கு அனைத்து மாநில குறைதீர் ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீட்டை விசாரணை செய்யும் அதிகாரம் மற்றும் சீராய்வு செய்யும் அதிகாரம் உண்டு.



### *3.2.2 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்*

பொருட்களின் மதிப்பு மற்றும் கோரப்படும் நிவாரணத் தொகை ரூபாய் 20 இலட்சம் முதல் ரூபாய் ஒரு கோடி வரையுள்ள வழக்குகளை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் விசாரணை செய்யும். மாநில ஆணையம் ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை தலைவராக கொண்டும், இரண்டு நீதிமுறைசார் உறுப்பினர்கள் மற்றும் பெண் உறுப்பினர் ஒருவரை உள்ளடக்கிய இரண்டு நீதிமுறைசாரா உறுப்பினர்களை கொண்டும் இயங்குகிறது. மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள பதிவாளரால் மாநில ஆணையத்தின் நிர்வாகமும், முப்பது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் நிர்வாகமும் கவனிக்கப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் வழக்குகள் மீதான மேல்முறையீடுகளையும், சீராய்வு மனுக்களையும் விசாரணை செய்யும் அதிகாரம் மாநில ஆணையத்திற்கு உண்டு. மாநில ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து மார்ச் 2015 வரை 26,230 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 91.20 சதவிகித அளவிலான, 23,921 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 3.2.3 *மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்*

ரூபாய் 20 இலட்சம் வரையிலான மதிப்புள்ள வழக்குகளை மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்

மன்றம் இருக்கவேண்டும். நீதிமுறை சார்ந்த மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் முப்பது மாவட்டங்களில் செயல்படுகின்றன. ஒவ்வொரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றமும் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஒருவரை தலைவராக கொண்டும் மற்றும் பெண் உறுப்பினர் ஒருவரை உள்ளடக்கிய இரண்டு உறுப்பினர்களை கொண்டு இயங்கும். இவற்றின் எல்லைக்குட்பட்ட மன்றத்தில் நுகர்வோர் ரூபாய் 20 இலட்சம் வரையிலான மதிப்புள்ள நிவாரணங்களுக்கு வழக்குகள் தொடரலாம். மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து மார்ச் 2015 வரை 1,10,042 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 92.75 சதவிகித அளவிலான, 1,02,068 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 3.2.3 *நுகர்வோர் குறைதீர் மன்றங்களை வலுப்படுத்துதல்*

நுகர்வோர் குறைதீர் மன்றங்களை பலப்படுத்துவதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. தற்போது, தமிழ்நாட்டில் 25 தனித்து இயங்கும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களும், விழுப்புரம், இராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களுக்கான மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் ஒருங்கிணைந்த மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களாக செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய 5 மாவட்டங்களில் தனித்து இயங்கும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் ஏற்படுத்தவும், திருப்பூர், அரியலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கு தனித்து இயங்கும் மாவட்ட



குறைதீர் மன்றங்களை தோற்றுவிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986–ல் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவான மூன்று மாதத்திற்குள் நுகர்வோர் வழக்குகளை முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 3.3 தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் சங்கம்

தமிழ்நாடு முழுவதுமான நுகர்வோர் நலன் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை ஒரு குடையின்கீழ் ஒருங்கிணைக்க, தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் சங்கம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இது, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளரை அலுவல்சார் தலைவராகவும், அரசு மற்றும் அரசுசாரா அமைப்புகளில் உள்ளவர்களை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு சார்ந்த நடவடிக்கைகளுக்காக மாநில அரசு, மத்திய அரசு, தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து இச்சேவைக்குழு நிதியுதவி பெறுகிறது. இச்சங்கத்தால் மாநில நுகர்வோர் தொடர்பு மையம் மற்றும் நுகர்வோர் ஆலோசனை மையம் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன. இது தவிர “**தமிழ்நாடு நுகர்வோர் கவசம்**” என்ற மாத இதழினை வெளியிடுதல்,

பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 3.4 மாநில நுகர்வோர் தொடர்பு மையம்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் மாநில நுகர்வோர் தொடர்பு மையத்தினை அரசு அமைத்துள்ளது. இச்சேவைக்கென, மைய அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,11,63,964/– நிதியுதவி அளித்துள்ளது.

மாநில நுகர்வோர் தொடர்பு மையம், நுகர்வோர் குறைதீர்வில் ஒரு மாற்று முறையாகும். நுகர்வோர், இம்மையத்தில் புகார் அளிக்கவும், விவரங்கள் பெறவும் இயலும். இம்மையம், விற்பனையாளர் / சேவையாளரை தொடர்பு கொண்டு நுகர்வோர் குறைகளை களைதல் மற்றும் உரிய விளக்கங்கள் அளித்தல் உள்ளிட்ட பணிகளை செய்து வருகிறது. இச்சேவை தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அளிக்கப்படுகிறது. மாநில நுகர்வோர் தொடர்பு மையத்தினை கீழ்க்காணும் தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் மூலமாக நுகர்வோர் தொடர்பு கொள்ளலாம்:

| தொலைபேசி எண் | மின்னஞ்சல் முகவரி | ஆன்லைன் பதிவு சேவை இணையதள முகவரி |
|---|---|---|
| 044–28592828 | consumer@nic.in | www.consumer.tn.gov.in |



## 3.5 விளம்பரம் மற்றும் கொள்கை பரப்பல்

பொதுமக்களுக்கு, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள், மாத வெளியீடுகள், விளம்பர வாசகங்கள், சுவரொட்டிகள் மற்றும் விளம்பரப் பலகைகள் உள்ளிட்ட மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக நுகர்வோர் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு அப்படங்கள் பொதிகை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன.

### 3.5.1 *நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள்*

பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவி குழுக்கள் மூலமாக 900 கிராமங்களில் உள்ள அடித்தட்டு மக்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதன் மூலம் இத்திட்டம் வெற்றிபெற்றுள்ளது.

தேசிய நுகர்வோர் சேவை மையம், மாநில நுகர்வோர் உதவி மையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஆகியவற்றின் தொலைபேசி எண்கள் கொண்ட தகவல் பலகைகள் ஒவ்வொரு நியாயவிலைக் கடைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், மக்கள் தங்களது குறைகள்/பிரச்சனைகளுக்கு பல்வேறு குறைதீர் மையங்களை அணுக இயலுகிறது.

தன்னார்வ நுகர்வோர் மன்றங்கள், மக்கள் நுகர்வோர் மன்ற மாணவர்கள் மற்றும் சிறந்த பிரபலங்களின் பங்கேற்புடன், நீடித்த நுகர்வு, உணவு வீணாவதை தவிர்த்தல், தவறாக வழிபடுத்தும் விளம்பரங்கள், நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான 52 வாரங்கள் ஒலிபரப்பாகக்கூடிய நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் வியாழக்கிழமைகளில் இரவு 7.30 முதல் 8.00 மணி வரையில், 18.12.2014 முதல் தொடர்ந்து ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

## 3.6 தமிழ்நாடு மாநில நுகர்வோர் நலநிதி தொகுப்பு

மாநில அரசு ரூ.50 இலட்சம் பங்களிப்புடன் மத்திய அரசின் பங்களிப்பான ரூ.50 இலட்சத்துடன் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி தொகுப்பு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களால் வசூலிக்கப்படும் அபராதத் தொகை மற்றும் கட்டணத் தொகை இந்த நிதியில் வரவு வைக்கப்படும். இந்நிதியானது, நுகர்வோர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றது. மேலும், இந்நிதியை வலுப்படுத்துவதற்கு 75:25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பு மூலமாக ரூ.10 கோடி நிதியம் ஒன்றை உருவாக்க மத்திய அரசு உத்தேசித்துள்ளது. மாநில அரசு தனது பங்களிப்பாக, ரூ.2.50 கோடியை ஒதுக்கியுள்ளது.



மத்திய அரசும் இந்நிதியத்தின் பங்களிப்பிற்காக ரூ.7.50 கோடியை ஒதுக்கியுள்ளது.

## 3.7 தமிழ்நாடு நுகர்வோர் கவசம் – நுகர்வோர் விழிப்புணர்வு மாத இதழ்

நுகர்வோருக்கு பொதுவாக அவர்களின் உரிமைகள், பொருட்களின் தரம், நுகர்வோர் சார்ந்த சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் நுகர்வோர் குறியீடு தொடர்பான தகவல்களை அவர்கள் அறியும் வகையில் **"தமிழ்நாடு நுகர்வோர் கவசம்"** என்ற மாத இதழ் வெளியிடப்பட்டு, மாநிலத்திலுள்ள அரசு அலுவலகங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் பொது நூலகங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இம்மாத இதழ் இந்திய செய்தித்தாள் பதிவாளரிடம் முறையாக பதிவுசெய்யப்பட்டு ரூ.10/– என்ற விலையில் வெளியிடப்படுகிறது. தற்போது இம்மாத இதழ் 8500 சந்தாதாரர்களை கொண்டுள்ளது.

## 3.8 இணையதளம்

தேசிய தகவல் மைய உதவியுடன் தனி இணைய தளத்தில் (www.consumer.tn.gov.in) நுகர்வோர்களுக்கான முக்கிய தகவல்கள், பொருள் வரையறை அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்பு உள்ளிட்ட விவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாக தொடர்ந்து நடத்தப்படும் நிகழ்வுகள் குறித்த விவரங்கள் மற்றும் துறை வாயிலாக வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர்

விழிப்புணர்வு தொடர்பான வெளியீடுகள் இத்தளத்தில் இடம் பெற்றுள்ளன. மேலும் இத்தளத்தில் நுகர்வோர் உரிமை மீறல் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்த புகார்களை நேரடியாக பதிவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. உணவு பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மக்களுக்கு ஆற்றி வரும் அனைத்து சேவைகள் தொடர்பான முழுமையான விவரங்களும் இந்த இணைய தளம் வாயிலாக அறிய இயலும்.



# இயல் –4

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

### 4.1 நிறுவனக் கட்டமைப்பு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனமாகும். பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத்திட்டங்களுக்கான அத்தியாவசிய பொருட்களை கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகளை இக்கழகம் மேற்கொள்கிறது. வெளிச்சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் சந்தை தலையீடு நடவடிக்கையாக இக்கழகம் அமுதம் பல்பொருள் அங்காடிகளை நடத்தி வருகிறது. மேலும், அரசின் முன்னோடி திட்டமான விலையில்லா மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்திற்கான மின்சாதனங்களை கொள்முதல் செய்து, வழங்கும் ஒருங்கிணைப்பு முகவராக செயல்படுகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் குழுமம் அதன் தலைவர் உள்ளிட்ட 12 இயக்குநர்களைக் கொண்டுள்ளது. உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இக்குழுமத்தின் தலைவராக உள்ளார்.

சென்னை மாவட்டத்தில் இரு மண்டலங்களும் மாவட்டத்திற்கு ஒரு மண்டலம் என

ஆக மொத்தம் 33 மண்டலங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொண்டுள்ளது. மண்டல அலுவலகங்கள் முதுநிலை மண்டல மேலாளர், மண்டல மேலாளர் என மாவட்ட வருவாய் அலுவலர், துணை ஆட்சியர் தலைமையில் இயங்கிவருகிறது. இந்நிறுவனத்தில் 8,430 நிரந்தர பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இது தவிர, 6,814 சுமைதூக்கும் தொழிலாளர்கள் கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணிபுரிகின்றனர்.

## 4.2 செயல்பாடுகள்

பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசி, சர்க்கரை, கோதுமை, பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்து, சேமித்து வைத்து, பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கும் பணியினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செய்து வருகிறது. இதற்காக பின்வரும் உள்கட்டமைப்பு வசதிகளை இக்கழகம் கொண்டுள்ளது;

அ) 11.37 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 302 கிடங்குகள்

ஆ) 1, 428 நியாய விலைக் கடைகள்

இ) 21 நவீன அரிசி ஆலைகள்

ஈ) 23 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

உ) 3 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்



ஊ) 5 சமையல் எரிவாயு விநியோக முகமைகள்

எ) 37 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

ஏ) தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

### 4.2.1 *கிடங்குகள்*

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 11.37 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 302 கிடங்குகளை பயன்படுத்தி வருகிறது. இதில் 8.27 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 219 கிடங்குகள் கழகத்தின் சொந்தக் கிடங்குகளாகும். மீதமுள்ளவை தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம், மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் மற்றும் தனியாரிடமிருந்து வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்படுகின்றன. பொது விநியோகத் திட்டத்திற்கான சேமிப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசு முன்னுரிமை அளிக்கிறது. 88 இடங்களில் 5.68 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை ரூ.687.57 கோடி மதிப்பீட்டில் நபார்டு (NABARD) வங்கி கடனுதவியுடன் கிடங்குகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நவீன தொழில் நுட்ப வசதியுடனான (silo) 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய சேமிப்பு கலன், நாகப்பட்டினம் மாவட்டம், எருக்கூரில் ரூபாய் 58.48 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது. இதற்கு நபார்டு வங்கியின் தொழில்நுட்ப சேவை (NABCONS) பெறப்படுகிறது.

## 4.2.2 *நியாய விலை கடைகள்*

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 27 மண்டலங்களில் 12,96,410 குடும்ப அட்டைகளுடனான 1,428 நியாயவிலைக் கடைகளுடன் செயல்பட்டு வருகிறது. பொருட்களின் தினசரி இருப்பு விபரம் குறுஞ் செய்திகள் மூலமாக கண்காணிக்கப்படுகிறது. மேலும், நியாயவிலைக் கடைகளுக்கான சொந்தக் கட்டடம் கட்டும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.2.3 *நவீன அரிசி ஆலைகள்*

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 21* நவீன அரிசி ஆலைகளைக் கொண்டுள்ளது. இவற்றின் மாதாந்திர அரவைத்திறன் 47,000 மெட்ரிக் டன் ஆகும். 15 ஆலைகளில் புழுங்கல் அரிசியும், இதர 6 ஆலைகளில் பச்சை அரிசியும் அரவை செய்யப்படுகிறது. இவ்வாலைகளின் அரவைத் திறனை மேம்படுத்தவும், அரிசியின் தரத்தை உயர்த்தவும், இவற்றை படிப்படியாக நவீனப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.26.27 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டன. இரண்டாம் கட்டமாக, 7 நவீன அரிசி ஆலைகளை நவீனப்படுத்தும் பணிகள் ரூ.32.60 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மூன்றாம் கட்டமாக, மீதமுள்ள ஆலைகள் ரூ.36 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* பகுதி 1 மற்றும் பகுதி 2ல் செய்யார் மற்றும் பொள்ளாச்சி நவீன அரிசி ஆலைகள் ஒரே அலகாக மாற்றப்பட்டது.



## 4.2.4 *அமுதம் பல்பொருள் அங்காடிகள்*

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சென்னை மாவட்டத்தில் 20 பல்பொருள் அங்காடிகள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் 3 பல்பொருள் அங்காடிகளுடன் மொத்தம் 23 அமுதம் பல்பொருள் அங்காடிகளை நடத்தி வருகிறது. இவ்வங்காடிகளில் பருப்பு மற்றும் தானியங்கள், அன்றாடம் தேவையான நுகர்பொருள்கள் மற்றும் பால் பொருட்கள் ஆகியன அதிகபட்ச சில்லறை விற்பனை விலையைவிடக் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. இதனால் வெளிச்சந்தையில் பொருட்களின் விலை ஏற்றம் திறம்பட கட்டுப்படுத்தப்படுகிறது.

அமுதம் பல்பொருள் அங்காடிகளின் விற்பனை அளவு ஆண்டுதோறும் உயர்ந்து வருகிறது. அதன் விபரம் வருமாறு:

| வ. எண். | ஆண்டு | விற்பனை அளவு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | 2011–12 | 35.48 |
| 2 | 2012–13 | 36.23 |
| 3 | 2013–14 | 51.59 |
| 4 | 2014–15 | 54.71 |

சாதாரண மக்கள் பயன்படும் வகையில், மாநிலம் முழுவதும் கூடுதலாக அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகளை திறந்து அவற்றின் செயல்பாடுகளை விரிவாக்குவதில் அரசு உறுதி கொண்டுள்ளது.

### 4.2.5 *பெட்ரோல்/டீசல் விற்பனை நிலையங்கள்*

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெய்வேலி, திருப்பத்தூர் மற்றும் பட்டுக்கோட்டையில் பெட்ரோல்/டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

### 4.2.6 *சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்*

திருச்சி, திருவண்ணாமலை, உதகை, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சமையல் எரிவாயு விநியோக முகவராக செயல்படுகிறது. இம்முகமையின் மூலம் 41,470 வாடிக்கையாளர்களை கொண்டுள்ளது.

### 4.2.7 *மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்*

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 14 மண்டலங்களில் 37 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. இவற்றுள் 29 சில்லறை விற்பனை நிலையங்களும், 7 சில்லறை மற்றும் மொத்த விற்பனை நிலையங்களாகவும், இவற்றில் ஒன்று மட்டும் மொத்த விற்பனை நிலையமாகவும் செயல்படுகின்றன.



### 4.2.8 *நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்*

விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்கு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. பொதுவாக ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் சுமார் 33 செண்ட் பரப்பளவில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்பு வசதி, உலர்களம், நெல் தூற்றும் இயந்திரம், மின்னனு தராசு, ஈரப்பதமானி ஆகிய வசதிகளை கொண்டுள்ளன. மேலும், ஒவ்வொரு ஆண்டும் நெல் சாகுபடிக்கேற்ப, மாநிலம் முழுவதும், குறிப்பாக காவிரி பாசனப் பகுதி மாவட்டங்களில் அதிகமான நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. 2014–15ஆம் ஆண்டு கரீப் கொள்முதல் பருவத்தில் 1,676 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. நெல் கொள்முதலில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மிக முக்கிய பங்குவகிப்பதால் இவற்றிற்கு நிரந்தர கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதில் அரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டித்தரும் நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்படும். தற்போது 311 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும் 225 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.3 நடவடிக்கைகள்

### 4.3.1 *நெல் கொள்முதல்*

2002–03ஆம் ஆண்டு கரீப் கொள்முதல் பருவத்திலிருந்து, பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ், நெல்கொள்முதல் செய்யும் மத்திய அரசின் முகவராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்படுகிறது. மேலும், நெல் கொள்முதலில் காவிரி பாசன மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் (NCCF) மூலமும் நெல் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. நடப்பு கரீப் (2014–15) கொள்முதல் பருவத்தில் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை மற்றும் தமிழ்நாடு அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை விவரங்கள் வருமாறு:

| ரகம் | குறைந்தபட்ச ஆதார விலை குவிண்ட்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத் தொகை குவிண்ட்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | மொத்த விலை குவிண்ட்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) |
|---|---|---|---|
| சன்ன ரகம் (Grade A) | 1,400/– | 70 | 1,470 |
| சாதாரண ரகம் (Common) | 1,360/– | 50 | 1,410 |



### 4.3.2 *கண்டுமுதல் அரிசி மற்றும் இந்திய உணவு கழக அரிசி இயக்கம்*

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலைகள் மற்றும் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள 436 தனியார் அரவை முகவர்களின் ஆலைகள் மூலம் அரிசியாக்கப்படுகிறது. மாநிலத்தின் மாதாந்திர பொது விநியோகத் திட்டத் தேவையில், அரவையின் மூலம் பெறப்படும் அரிசி போக, மிகுதியாகத் தேவைப்படும் அரிசியில் மாநிலத்திற்குரிய அளவினை இந்திய உணவு கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நகர்வு செய்யப்படுகிறது. நெல் கொள்முதல் செய்வதிலிருந்து அரிசியாக மாற்றப்படுவது வரை ஆகும் செலவினத்திற்கு உரித்தான விலையினை மத்திய அரசு மானியமாக வழங்கி வருகிறது.

### 4.3.3 *பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி இயக்கம்*

மாநிலத்தின் மாதாந்திர தேவையான 3.25 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியில் 2.96 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியினை இந்திய உணவு கழக கிடங்குகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நகர்வு செய்கிறது. கூடுதல் தேவைக்கான அரிசி சிறப்பு ஒதுக்கீடு மூலமாக வழங்கப்படுகிறது.

### 4.3.4 *நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை இயக்கம் செய்தல்*

பொதுவாக நியாய விலை கடைகளுக்கான மாதாந்திர ஒதுக்கீட்டில், 60 சதவீதப் பொருட்கள் முந்தைய மாதம் 25–ம் தேதியிலிருந்து நடப்புமாதம் 5–ம் தேதிக்குள் முன் நகர்வு செய்யப்படுகின்றன. மீதமுள்ள 40 சதவீத பொருட்கள் நடப்பு மாதம் 20–ஆம் தேதிக்குள் நகர்வு செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்திற்குண்டான பொருட்கள் நகர்வு செய்வதில் விடுதல் இருப்பின், உரிய அலுவலரின் சிறப்பு அனுமதி பெற்று அப்பொருட்கள் மாத இறுதிக்குள் நகர்வு செய்யப்படுகின்றன.

### 4.3.5 *ரூ.20/–க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டம்*

வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயர்வினை கட்டுப்படுத்தும் நோக்கில் 1 கிலோ அரிசி ரூ.20/–க்கு விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தரம் மேம்படுத்தப்பட்ட ஒற்றை அவியல் புழுங்கல் அரிசி (Single Boiled cum Sortexed), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் பல்பொருள் அங்காடிகள், கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் சிறப்பு அங்காடிகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. 31.03.2015 வரை 9,283 மெட்ரிக் டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.



### 4.3.6 *பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள்*

பொது மக்களுக்கு நியாயமான விலையில் புதிய காய்கறிகளை விற்பனை செய்யும் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள் திட்டம் 20.06.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சென்னையில் 9 பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகளை நடத்தி வருகிறது. 31.03.2015 வரையில் ரூ.1.60 கோடி மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 4.3.7 *வெளிச்சந்தையில் புளி விற்பனை*

புளியின் விலை ஏற்றத்தினை கட்டுப்படுத்தி, நியாயமான விலையில் பொதுமக்களுக்கு கிடைக்க செய்யும் பொருட்டு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலிருந்து புளியினை மொத்த கொள்முதல் செய்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலைகள் மூலம் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1 கிலோ புளி ரூ.60 என்ற விலையில் 31.03.2015 வரை 99.75 மெட்ரிக் டன் புளியினை விற்பனை செய்துள்ளது.

### 4.3.8 *ஊட்டித் தேயிலை விற்பனை*

பொதுவிநியோக திட்டத்தின் மூலம் மக்களுக்கு ஊட்டித் தேயிலை தூள் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. ஊட்டித்

தேயிலையின் கொள்முதல் விலை மற்றும் விற்பனை விலை விபரம் வருமாறு :

| வ. எண். | அளவு | கொள்முதல் விலை (ரூபாயில்) | விற்பனை விலை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | 100 கிராம் | 13.00 | 15.00 |
| 2 | 250 கிராம் | 31.50 | 36.00 |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சில்லரை விற்பனை அங்காடிகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலம் ஊட்டித் தேயிலை தூள் விற்பனை செய்யப்படுகிறது.

## 4.3.9 *அம்மா உப்பு விற்பனை*

அம்மா உப்பு விற்பனை தமிழ்நாடு அரசால் 11.06.2014 அன்று துவங்கப்பட்டது. மக்களின் அயோடின் குறைபாடுகளை களையும் வண்ணம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் உப்பு ஆகிய மூன்று விதமான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் பெறப்பட்டு வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் பல்பொருள் அங்காடி மற்றும் நியாயவிலை அங்காடிகள் மூலமாக **31.03.2015** வரை **71.43** மெட்ரிக் டன் அம்மா உப்பு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



## 4.3.10 *சிறப்புப் பொது விநியோகத்திட்டம்*

பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களின் வெளிச்சந்தை விலையேற்றத்தினை கட்டுப்படுத்தும் பொருட்டு, சிறப்புப் பொது விநியோக திட்டத்தை அரசு அறிமுகம் செய்தது. இத்திட்டத்தின்கீழ், கனடா மஞ்சள் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு பின்வரும் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

| வ. எண். | பொருள் | விற்பனை விலை (ரூபாய் கிலோ/லிட்டர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | கனடா மஞ்சள் பருப்பு | 30.00 |
| 2 | உளுத்தம் பருப்பு | 30.00 |
| 3 | பாமாயில் | 25.00 |

இத்திட்டத்திற்கான முழு மானியமும் தமிழ்நாடு அரசால் ஏற்கப்படுகிறது.

## 4.3.11 *அம்மா சிமெண்ட் விநியோகத் திட்டம்*

ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தினர் வாங்கிப் பயன்பெறும் விலையில் சிமெண்ட் விற்பனை செய்ய, தமிழ்நாடு அரசால் **அம்மா சிமெண்ட்** விநியோகத்

திட்டம் 05.01.2015 அன்று துவங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 50 கிலோ சிமெண்ட் மூட்டை ஒன்று ரூ.190/–க்கு விற்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான விதிமுறைகள் வருமாறு :

| | | |
|---|---|---|
| ஆவண ஆதாரம் | அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடம் அல்லது கிராம நிர்வாக அலுவலர் / வருவாய் ஆய்வாளர் / ஒன்றிய மேற்பார்வையாளர் / ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சாலை ஆய்வாளர் வழங்கும் அங்கீகாரக் கடிதம் | |
| கட்டடம் பழுது பார்க்க | குறைந்தபட்சம் 10 மூட்டைகள்<br>அதிகபட்சம் 100 மூட்டைகள் | |
| வீடு கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட அளவு – அதிகபட்சம் 1500 சதுர அடி<br>100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம் | 500 சதுர அடிக்கு – 250 மூட்டைகள் | |
| | 501 – 1000 சதுர அடிக்கு – 500 மூட்டைகள் | |
| | 1001 – 1500 சதுர அடிக்கு –750 மூட்டைகள் | |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு சிமெண்ட், தொழிற்சாலை வாரியாக, தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அங்கிருந்து பொதுமக்களுக்கு சிமெண்ட் விற்பனை செய்யப்படுகிறது.



### 4.3.12 *விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் விநியோகம்*

பொது விநியோகத் திட்டத்தில் அரிசி பெறத் தகுதியுடைய மகளிரின் அன்றாட வேலைப் பளுவினை குறைப்பது மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் தகுதி உள்ள பெண் பயனாளிகளுக்கு ஒரு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் முன்னோடி திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. நீலகிரி மாவட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட கொடைக்கானல் வட்ட பயனாளிகளுக்கு, மின்விசிறிக்குப் பதிலாக மின்காந்த அடுப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2014–15 மற்றும் 2015–16ஆம் நிதி ஆண்டுகளுக்காக 90 இலட்சம் மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் கொள்முதல் செய்திட, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அரசு ஆணையிட்டுள்ளது. பொருட்கள் விநியோகம் நடைபெற்று வருகிறது.

## 4.4 கண்காணிப்பு

பொது விநியோகத் திட்டத்தை திறம்பட கண்காணிப்பதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவை,

1) கிடங்குப் பணிகள் அனைத்தையும் கணினி மயமாக்குதல்.

2) கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரிசி/கோதுமை ஆகியவை இந்திய உணவுக் கழக கிடங்குகளிலிருந்து

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கும் மற்றும் அங்கிருந்து நியாயவிலை அங்காடிகளுக்கும் லாரிகளில் நகர்வு செய்யப்படுவதை ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்ட வாகன நகர்வு கண்காணிப்புத் திட்டம் மூலமாக கண்காணிக்கப்படுகிறது.

3) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை அமைத்து, களப் பணிகளை கணினி மூலம் கண்காணித்தல்.

4) குறுஞ் செய்தி மூலமாக நியாய விலைக் கடைகளில் உள்ள தினசரி இருப்பு விபரத்தை கண்காணித்தல்.

## 4.5 நிதி நிலை

இந்நிறுவனத்தின் தற்போதைய அனுமதிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ.70 கோடி மற்றும் ரூ.59.86 கோடியாக உள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் கழகத்தின் விற்று முதல் ரூ.8,917.45 கோடியாகும். (தோராயமாக)

2015–2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.5,300 கோடி வழங்கப் பட்டுள்ளது.



# இயல் – 5

# தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

## 5.1 முன்னுரை

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் வேளாண் உற்பத்தி (மேம்பாடு மற்றும் சேமிப்புக் கிடங்கு) நிறுவனச் சட்டம் 1956ன்படி தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் 02.05.1958 முதல் தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 மண்டலங்களில் முதுநிலை மண்டல மேலாளர்/ மண்டல மேலாளர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது.

## 5.2 செயல்பாடுகள்

இந்நிறுவனம் மாநிலம் முழுவதிலும் 55 கிடங்குகளைக் கொண்டுள்ளது. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு விஞ்ஞான ரீதியிலான சேமிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து விளைபொருட்களின் சேமிப்பு இழப்பினைத் தடுப்பதே இந்நிறுவனத்தின் முக்கியச் செயல்பாடாகும். இந்நிறுவனம் வாய்ப்புள்ள இடங்களில் சந்தை ஆய்வினை மேற்கொண்ட பின், நிலம் கையகப்படுத்தி விஞ்ஞான ரீதியிலான சேமிப்புக் கிடங்குகளைக் கட்டி வருகிறது. இந்நிறுவனம், விவசாயிகள் மற்றும்

வணிகர்களுக்கும் வங்கிகளிடமிருந்து கடன் வசதியைப் பெற ஏதுவாக மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை (Negotiable Warehouse Receipts) வழங்குகிறது. இந்நிறுவனம் அதன் சேமிப்புக் கிடங்குகளிலும் அதே போன்று வணிகம்சார் பணியாக பல்வேறு அரசு மற்றும் தனியார் கட்டிடங்களிலும் பூச்சித் தாக்குதல் தடுப்புப் பணிகள் மற்றும் பூச்சிக்கொல்லி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 5.3 நிறுவனத்தின் அமைப்பு

இந்நிறுவனத்தின் பொதுவான கண்காணிப்பு மற்றும் மேலாண்மைப் பணிகள், தலைவர் உள்ளடங்கிய 11 இயக்குநர்களைக் கொண்ட குழுமத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மூலம் தலா 5 இயக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இயக்குநர்கள் குழுமத்தின் தலைவர், தமிழ்நாடு அரசால் நியமனம் செய்யப்படுகிறார்.

அரசால் எடுக்கப்படும் கொள்கை முடிவுகளின் வழிகாட்டுதலின்படி, இக்குழுமம் பொது நலன் கருதி வலுவான வியாபாரக் கோட்பாடுகளின்படி செயல்படுகிறது.

## 5.4 சேமிப்புக் கொள்ளளவு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மொத்தக் கொள்ளளவு 6.71 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு



நிறுவனத்திற்குச் சொந்தமான கிடங்குகளின் கொள்ளளவு 6.48 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். வாடகைக் கிடங்குகளின் கொள்ளளவு 0.23 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

### 5.4.1 *பயன்பாடு*

இந்நிறுவனத்தின் சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவானது, அரசு நிறுவனங்களான இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தமிழ்நாடு மாநில விற்பனை இணையம், சர்க்கரை ஆலைகள், உர உற்பத்தி நிறுவனங்கள், அரசுத் துறைகள், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் முதலானவை, வணிகர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர்களால் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 31.07.2015 அன்றைய தேதியில், பயனீட்டு அளவு 96% என்ற சாதனையை எட்டியுள்ளது.

## 5.5 சேமிப்புக் கிடங்கு பயன்படுத்துபவர்கள் மற்றும் இருப்பு வைப்புக் கட்டணத்தில் அனுமதிக்கப்பட்ட தள்ளுபடி விபரம்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் பின்வரும் அரசு/பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுக்கு இருப்பு வைப்புக் கட்டணத்தில் தள்ளுபடி அளித்து வருகிறது;

| வ. எண் | சேமிப்புக் கிடங்கு பயன்படுத்துபவர் | பொருள் | அனுமதிக்கப் பட்ட சலுகை (விழுக்காட்டில்) |
|---|---|---|---|
| 1 | விவசாயிகள் | உணவுத் தானியங்கள் | 30 |
| 2 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | உணவுத் தானியங்கள் | 30 |
| 3 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | நோட்டுகள் மற்றும் பாடப் புத்தகங்கள் | 25 |
| 4 | வருவாய்த் துறை | மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் | 20 |
| 5. | வருவாய்த் துறை | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்குப் பெட்டிகள் | 20 |
| 6 | கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் | சர்க்கரை | 20 |
| 7 | ஆவின் | பால் பொருட்கள் | 20 |
| 8 | MFL, IFFCO, FACT மற்றும் KRIBHCO போன்ற பொதுத் துறை உர உற்பத்தி நிறுவனங்கள் | உரம் | 10 |
| 9 | கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் / தமிழ்நாடு மாநில விற்பனை இணையம், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் | விவசாயப் பொருட்களான கொப்பரை, சோளம் முதலியன, வேட்டிகள், சேலைகள் | 10 |
| 10 | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | இந்தியத் தயாரிப்பு வெளிநாட்டு மதுபானம் | 10 |
| 11 | இந்திய உணவுக் கழகம் | மத்திய அரசு நிர்ணயிக்கும் சேமிப்புக் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. | |



## 5.6 மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கட்டுமானப் பணிகள்

இந்நிறுவனமானது, சேமிப்புக் கிடங்கின் கொள்ளளவு வசதியை மேம்படுத்த பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

| வ. எண். | இடம் | கிடங்கு–களின் எண்ணிக்கை | கொள்–ளளவு (மெட்ரிக் டன்) | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | பட்டிணம்காத்தான் கிராமம், இராமநாதபுரம் மாவட்டம் | 3 | 15,000 | 17.72 |
| 2 | காரைக்குடி சேமிப்புக் கிடங்கு வளாகம், சிவகங்கை மாவட்டம் | 1 | 5,000 | 4.25 |
| 3 | தேனி சேமிப்புக் கிடங்கு வளாகம், தேனி மாவட்டம் | 2 | 10,000 | 9.08 |
| 4 | முத்தூர் கிராமம், திருநெல்வேலி மாவட்டம் | 5 | 25,000 | 24.15 |
| 5 | இராணிப்பேட்டை சேமிப்புக் கிடங்கு வளாகம், வேலூர் மாவட்டம் | 2 | 10,000 | 8.91 |
| **மொத்தம்** | | **13** | **65,000** | **64.11** |

## 5.7 பயிற்சி

2014–15ஆம் நிதியாண்டில் 23 பணியாளர்கள், இந்திய உணவுத் தானியப் பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஹைதராபாத் மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம், புதுடெல்லி ஆகிய

நிறுவனங்களில் பல்வேறு பயிற்சித் திட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் உணவுத் தானியங்களை விஞ்ஞான முறையில் சேமித்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வுப் பயிற்சியினை நிறுவனத்தின் களப்பணியாளர்களுக்கு ரூ.15 இலட்சம் செலவிலும் 1550 விவசாயிகளுக்கு ரூ.50 இலட்சம் செலவிலும் அளித்திட உத்தேசித்துள்ளது.

## 5.8 நிதி செயலாக்கம்

(ரூபாய் கோடியில்)

| விபரம் | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 (உத்தேசமாக) |
|---|---|---|---|---|
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (மாநில அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தலா 50% ) | 7.61 | 7.61 | 7.61 | 7.61 |
| மொத்த வருமானம் | 40.62 | 40.50 | 49.35 | 53.74 |
| செலவு | 25.70 | 31.42 | 26.13 | 31.22 |
| லாபம் (வரி செலுத்தும் முன்) | 15.11 | 9.06 | 23.22 | 22.78 |



### 5.8.1 *ஆதாயப் பங்கு*

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது, 2013-14ஆம் ஆண்டிற்கு பங்கு முதலீட்டாளர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் 30% ஆதாயப்பங்காக ரூ.2.28 கோடி அளித்துள்ளது. 2013-14ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ.15.04 கோடி ஆகும்.

## 5.9 சமூகக் கூட்டாண்மைப் பொறுப்பு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், ஒரு சமூகப் பொறுப்புள்ள நிறுவனமாக உடல் ஊனமுற்றவர்களது வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு நிதி உதவி அளித்தல் போன்ற நடவடிக்கைகளை சமூகக் கூட்டாண்மைப் பொறுப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், வருடாந்திர இலாபத்தில் 2%ஐ ஒதுக்கீடு செய்கிறது. இந்நிறுவனம் 2013-14 மற்றும் 2014-15ஆம் நிதியாண்டுகளில் சமூகக் கூட்டாண்மைப் பொறுப்பு திட்டத்தின்கீழ் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.43.98 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்துள்ளது.

## 5.10 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளின் மீது கடன் வசதிகள்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தால் 36 சேமிப்புக் கிடங்குகள் சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், 2007–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையம், இந்நிறுவனத்தின் கிடங்கு வசதியைப் பயன்படுத்தும் தனியார் சரக்கு வைப்பாளர்கள்/ விவசாயிகள், வங்கிகள் மூலம் கடன் பெற ஏதுவாக, மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை (Negotiable Warehouse Receipts) வழங்குகின்றது. அதன் விவரம் பின்வருமாறு:

| வருடம் | வழங்கப்பட்ட மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளின் எண்ணிக்கை | பெறப்பட்ட வங்கிக் கடன் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2011–12 | 3,529 | 191.00 |
| 2012–13 | 1,479 | 93.00 |
| 2013–14 | 2,575 | 184.00 |
| 2014–15 | 2,251 | 105.00 |
| **மொத்தம்** | **9,834** | **573.00** |



தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் விவசாயிகளிடம் சேமிப்புக் கிடங்கு (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் பயன்கள் குறித்தும், அதன் மூலம் மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள் மீது தேசியமயமாக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட வங்கிகள் மூலம் விவசாயப் பொருட்கள் மீது கடன் பெறும் வசதி குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

## 5.11 சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தால் வழங்கப்பட்ட பரிசுகள்

இந்நிறுவனத்தின் சிறந்த செயலாக்கங்கள் பல்வேறு நிலைகளில் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. **சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தால் 2013–14**ஆம் ஆண்டில் கீழ்க்குறித்த மூன்று சேமிப்புக் கிடங்குகள், பல்வேறு பரிசுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**முதல் பரிசு – ஆரணி சேமிப்புக் கிடங்கு**

**இரண்டாம் பரிசு – அவினாசி சேமிப்புக் கிடங்கு**

**மூன்றாம் பரிசு – இராஜபாளையம் சேமிப்புக் கிடங்கு**

20.11.2014 அன்று சேமிப்பு கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட நாளில் புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் இந்திய அரசின் மாண்புமிகு மத்திய நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோகத் திட்ட அமைச்சர் அவர்களால் இப்பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

# இயல்–6

# அமலாக்கம்

## 6.1 முன்னுரை

பொது விநியோக திட்டத்தின் கீழ் அரிசி விலையின்றியும், இதர பொருட்கள் மானிய விலையிலும் வழங்கப்படுகின்றன. சமூக விரோதிகள் இந்த அத்தியாவசியப் பொருட்களைக் கடத்தி கள்ளச்சந்தையில் விற்க முயல்கின்றனர். இச்சமூக விரோத செயல்களைத் தடுத்து நிறுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

## 6.2 செயலாக்கம்

பொது விநியோகத் திட்டச் செயலாக்கப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்த கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுப் பிரிவு ஒரு காவல் துறை தலைவர் உதவியுடன் செயல்படுகிறது. 33 குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலகுகள், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955–னை மாநிலம் முழுவதும் சிறப்பாகச் செயல்படுவதை உறுதி செய்கின்றன. இதைத்தவிர, 5 எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.



அவ்வப்பொழுது ஆய்வுகள் மற்றும் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு கடத்தல் தடுக்கப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களைக் கடத்துபவர்கள் மற்றும் சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2014–15ஆம் ஆண்டில், குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறையால், 6,702 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 6,704 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 1,470 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக, தோராயமாக, 797.70 மெட்ரிக் டன் பொது விநியோகத் திட்ட அரிசி கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளது. 2014–15ஆம் ஆண்டில், கள்ளச்சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் விநியோகப் பராமரித்தல் சட்டம், 1980ன் கீழ், 133 முக்கிய குற்றவாளிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகக் கிடங்குகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லும் போதும் மற்றும் அங்கிருந்து நியாயவிலை அங்காடிகளுக்கு எடுத்துச் செல்லும் போதும் வழியில் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநரின் நேரடி கண்காணிப்பில் விழிப்புப் பணிக்குழு அலுவலர் தலைமையில் ஒரு குழு செயல்படுகிறது.

## 6.3 உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையரகத்தின் அமலாக்கச் செயல்பாடுகள்

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்களின் விநியோகத்தை முறையாகக் கண்காணித்து மேம்படுத்த மாவட்டம் மற்றும் வருவாய் கோட்ட அளவில் பொதுமக்களின் பிரதிநிதிகள் மற்றும் நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஆலோசனைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டில் செயல்படும் பறக்கும்படைகள் மேலும் சிறப்பாகப் பணிபுரிய அவர்களுக்குப் புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து பறக்கும்படை வட்டாட்சியர்களுக்கும் பொருட்கள் கடத்தப்படுவது குறித்த புலனாய்வு விவரங்களைச் சேகரித்து திடீர் சோதனை மேற்கொள்ள ஏதுவாக, ரூ.800/-வரை ஏற்பளிக்கப்பட்ட கட்டணம் கொண்ட அலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை நகரத்தைப் பொறுத்தவரை துணை ஆணையாளர் வடக்கு/ தெற்கு ஆகியோர் பொது விநியோகத் திட்ட செயலாக்கப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுகின்றனர்.

## 6.4 கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கைகள்

- பதுக்கல் மற்றும் கடத்தலில் ஈடுபடும் அத்தியாவசியப் பொருட்களைக் கைப்பற்றும் வகையில் தகவல் தரும் நபருக்கு ரூ.1,000/– வெகுமதி அளிக்கப்படுகிறது. அதே போல, போலி குடும்ப அட்டைகளைக் கைப்பற்றுதல் மற்றும் ரத்து செய்தல் தொடர்பான தகவல் தரும் நபருக்கு ரூ.250/– வெகுமதி அளிக்கப்படுகிறது.

- பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் உரிமங்கள் மற்றும் ஓட்டுநர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படுகின்றன.

- மானியத்துடன் கூடிய வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு உருளைகளைக் கள்ளச் சந்தையில் புழக்கத்தில் விடுவதைத் தடுக்கும் வண்ணம் சிறப்புச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- முறைகேடாகப் பொது விநியோகத் திட்ட அரிசியை மறு சுழற்சி செய்யும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல் அரவை முகவர்களின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்துசெய்யப்படுகின்றன.

## 6.5 செயலாக்கம்

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையால் **16.05.2011** முதல் **31.07.2015** வரை மேற்கொள்ளப்பட்ட கைப்பற்றுகை விவரம் பின்வருமாறு:

| விபரம் | **16.05.2011 முதல் 31.07.2015 வரை** | | | |
|---|---|---|---|---|
| **மொத்த வழக்குகள்** | **35,438** | | | |
| கைப்பற்றுகை | **வழக்குகளின் எண்ணிக்கை** | அளவு மெ.டன்/ கிலோ லிட்டர் | **மதிப்பு** (ரூபாய்) | |
| அ) பொது விநியோகத் திட்ட அரிசி | 19,095 | 5,223.20 | 2,95,11,080 | |
| ஆ) மண்ணெண்ணெய் | 4,313 | 259.954 | 38,99,310 | |
| இ) சிலிண்டர் (எண்ணிக்கையில்) | 11,240 | 16,282 | 1,46,53,800 | |
| ஈ) மற்றவை (மதிப்பில் – ரூ) | 790 | | 5,57,46,362 | |
| **மொத்த மதிப்பு (ரூ)** | **10,38,10,552** | | | |
| கைது எண்ணிக்கை | **25,505** | | | |
| கைப்பற்றிய மொத்த வாகனங்கள் | **2 சக்கரம்** | **3 சக்கரம்** | **4 சக்கரம்** | **மொத்தம்** |
| | 3,750 | 343 | 1,575 | **5,668** |
| தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | **736** | | | |



தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அமலாக்கம் சிறப்பான அமலாக்கம் என **04.07.2014** அன்று புதுதில்லியில் நடைபெற்ற உணவுத்துறை அமைச்சர்களுக்கான மாநாட்டில் பாராட்டப்பட்டுள்ளது.

## முடிவுரை

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் நுகர்வோர் நலனைப் பாதுகாக்கவும், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை பெருமுயற்சி மேற்கொண்டுள்ளது. துறையானது இதனை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

**இரா. காமராஜ்**
உணவு, இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்